**BEFORE THE NATIONAL GREEN TRIBUNAL**

**SOUTHERN ZONE, CHENNAI**

**Original Application No. 133 of 2016 (SZ)**

**IN THE MATTER OF**

Application 133 of 20 filed by OLYMPIA TECHPARK (Chennai) Pvt Ltd, Sidco Industrial Estate, Guindy, Chennai -32 before the Hon'ble National Green Tribunal (SZ), regarding requestation to pass orders to prevent Air and Water pollution caused by the dumoing of solid waste, stocking and burning of garbage in an open air land fill on the bank of Adayar river at Thiruneermalai Town Panchayat.

.... Application(S)

**Versus**

1. The Government of Tamil Nadu.,
   Rep by its Secretary,
   Municipal Administration and Water Supply Department,
   Secretariat, Fort St.George,
   Chennai, Tamil Nadu – 600 009.

2. The Chief Secretary to Government.,
   Environment and Forests Department,
   Secretariat, Fort St.George,
   Chennai, Tamil Nadu – 600 009.

3. The Member Secretary,
   Tamil Nadu Pollution Control Board,
   No.76, Anna Salai, Guindy,
   Chennai, Tamil Nadu – 600 032.

4. The District Collector,
   Kancheepuram District.

5. The Director, Town and Country planning, Chennai.

6. The Director, Environment Dept,Chennai.

7. Assistant Commissioner,
   Greater Chennai Corporation,
   Chennai.



Scanned by TapScanner

8. The Superintending Engineer,
Greater Chennai Corporation,
Chennai.

9. Commissionerate of Town Panchayats,
Rep by its Commissioner,
7th & 8th Floor, Urban Administrative Office Campus,
Chennai – 600 028.

10. Thiruneermalai Town Panchayat,
Rep by its Executive Officer,
Madambakkam, Chengalpet District.

11. The District Environmental Engineer, TNPCB.

12. Supertending Archeologist,
Archelogical survey of India,
Chennai.

13. Chief Engineer,
Public Works Department,
Chennai-05.

14. Madhu Sudhana Reddy Hyderabad.

.... Respondents

**MEMO FILED ON BEHALF OF THE RESPONDENTS - 9 & 10**

The counsel for the respondents – 9 & 10 submits as follows:

It is humbly submitted this O.A. is filed by OLYMPIA TECHPARK (Chennai) Pvt Ltd, Sidco Industrial Estate, Guindy, Chennai -32 for orders to prevent Air and Water pollution caused by the dumping of solid waste, stocking and burning of garbage in an open air land fill on the bank of Adayar river at Thiruneermalai Town Panchayat.

It is submitted that the 10th respondent has complied with interim orders and submitted status report as directed. Meanwhile, the Government took a policy decision to create new Tambaram Corporation by amalgamating 10th respondent Town Panchayat with Tambaram



Scanned by TapScanner

Municipality and passed G.O(Ms) No.66, MA & WS (Election) Dept, dated 11.09.2021. Consequently, the entire administration of 10th respondent Thiruneermalai Town Panchayat has been taken over by the newly formed Tambaram Corporation. Now, the Tambaram Corporation is coming under the Director of Municipal Administration. Hence, it is just and necessary to delete the names of respondents- 9 & 10 from the cause title and implead the right parties, in the interest of justice.

It is therefore prayed that this Hon'ble Tribunal may be pleased to pass appropriate orders to delete the names of respondents- 9 & 10 from the cause title and impleade the Director of Municipal Administration, having office at 11th Floor, Urban Administrative Office Campus, No.75, Santhome High Road, MRC Nagar, RA Puram, Chennai-28, in lieu of the 9th respondent and impleade the Commissioner of Tambaram in lieu of the 10th respondent for proper adjudication to enable the matter to reach its logical conclusion and thus render justice.

Dated at Chennai on this 25 day of February, 2022

Counsel for the respondents – 9 & 10



Scanned by TapScanner

①

சுருக்கம்

தாம்பரம் பெரு நகராட்சி – உத்தேச விரிவாக்கம் – தாம்பரம் மாநகராட்சியை அமைத்துருவாக்கும் பொருட்டு, 5 நகராட்சிகள் மற்றும் 5 பேரூராட்சிகளை இணைத்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

-----------------------------------------------------------------------------------

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை

நாள்: 11.09.2021

அரசாணை (நிலை) எண்.66

திருவள்ளுவர் ஆண்டு 2052
பிலவ, ஆவணி–26.

படிக்கப்பட்டது:

(1) செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் கடித எண்.3621/2021/ப.ஆ.2, நாள்.03.09.2021.

(2) நகராட்சி நிர்வாக இயக்குநர் கடித ந.க.எண்.20782/2021/மாநஅ–1, நாள் 04.09.2021.

******

ஆணை :

தமிழ்நாடு சட்டப்பேரவையில், 2021–2022 ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கையின் போது, பிறவற்றுடன் கீழ்காணுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது:–

"2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நகர்ப்புர மக்கள் தொகை 48.45 சதவீதம் ஆகும். 2021 ஆம் ஆண்டு தற்போதைய சூழலில் மொத்த மக்கள் தொகையில் நகர்ப்புர மக்கள் தொகை சுமார் 53 சதவீதமாக உயர்ந்துள்ளதென கருதப்படுகிறது. எனவே, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளை ஒட்டியுள்ள நகர்ப்புரத் தன்மையோடு உள்ள பகுதிகளை நகர்ப்புரங்களோடு இணைத்து தேவையான கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவது இன்றியமையாததாகக் கருதப்படுகிறது.

தற்போது நகராட்சியாக உள்ள உள்ளாட்சி அமைப்புகளை மாநகராட்சியாகவும், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி அமைப்புகளை நகராட்சியாகவும், அதேபோன்றே மாநகராட்சிகள், நகராட்சிகளில் சிலவற்றை விரிவாக்கம் செய்திடவும் தொடர்ந்து கோரிக்கைகள் வந்தவண்ணம் உள்ளன.

தற்போதுள்ள நகர்ப்புர உள்ளாட்சிகளைச் சுற்றியுள்ள பகுதிகளில், நகர்ப்புரத்தன்மை, மக்கள் தொகை, மக்கள் தொகை அடர்த்தி, ஆண்டு வருமானம், பொருளாதார முக்கியத்துவம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையிலும் நகர்ப்புரமாக மாறி வருகின்ற இந்த பகுதிகளிலும் நகரத்திற்கு இணையான அடிப்படை வசதிகளை அளித்திடும் நோக்கிலும் உள்ளாட்சி அமைப்புகள் தரம் உயர்த்தப்படுகிறது"

**2.** இதன்படி, "தாம்பரம், பல்லவபுரம், செம்பாக்கம், பம்மல், அனகாபுத்தூர், ஆகிய நகராட்சிகள் மற்றும் அதனைச் சுற்றி அமைந்துள்ள பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளையும் ஒன்றிணைத்து ஒரு மாநகராட்சியாக அமைக்கப்படும்" என அறிவிக்கப்பட்டுள்ளது.

**3.** இதனைத் தொடர்ந்து, மேற்படி அறிவிப்பின் அடிப்படையில், புதிய மாநகராட்சியை அமைத்து உருவாக்குவது தொடர்பான செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரின் பார்வை (1)–ல் படிக்கப்பட்ட செயற்குறிப்பில், கீழ்காணும் 4 நகராட்சிகள் மற்றும் 5 பேரூராட்சிகளை தாம்பரம் பெருநகராட்சியுடன் இணைத்திட தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

Scanned by TapScanner

மேலும், இதனுடன் 15 கிராம ஊராட்சிகளையும், இணைத்திட தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

| வ.எண். | உள்ளாட்சியின் பெயர் |
|---|---|
| | **நகராட்சிகள்** |
| 1 | பல்லவபுரம் |
| 2 | பம்மல் |
| 3 | செம்பாக்கம் |
| 4 | அனகாபுத்தூர் |
| **பேரூராட்சிகள்** | |
| 5 | சிட்லபாக்கம் |
| 6 | மாடம்பாக்கம் |
| 7 | பெருங்களத்தூர் |
| 8 | பீர்க்கங்கரணை |
| 9 | திருநீர்மலை |

**4.** மேலும், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் தனது கடிதத்தில், தாம்பரம் நகராட்சி 20.72 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்டதாகும் எனவும், 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 1,74,787 மற்றும் தற்போது 2021 ஆம் ஆண்டின் தோராய மக்கள் தொகை 2,41,332 ஆகும் எனவும், தாம்பரம் நகராட்சியின் 2020-21 ஆம் ஆண்டிற்கான மொத்த வருவாய் ரூ.90.57 கோடியாகும் எனவும் தெரிவித்துள்ளார். தாம்பரம் நகராட்சி சேலையூர், தாம்பரம் கடப்பேரி, இரும்புலியூர் மற்றும் புலிக்கொரடு ஆகிய 5 வருவாய் கிரமங்களை உள்ளடக்கியதாகும் எனவும், தாம்பரம் நகராட்சி தென்னக ரெயில்வே ஊழியர்கள் குடியிருப்பு மற்றும் இந்திய விமான படையை சார்ந்த இடங்கள் நீங்கலாக மீதம் உள்ள பகுதிகள் 39 வார்டுகளாக இருந்து வருகின்றன எனவும் தெரிவித்துள்ளார்.

**5.** செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் தனது கடிதத்தில், தாம்பரம் பகுதி சென்னை பெருநகரத்தின் நுழைவாயிலாக உள்ளதுடன் ஜி.எஸ்.டி சாலையில் உள்ள பன்னாட்டு நிறுவனங்கள் பலவும் அமைந்துள்ள MEPZ (Madras Export Processing Zone) மூலம் இந்நகராட்சிக்கு வருவாய் ஈட்டித் தருகிறது எனவும், பழமையும், பெருமையும் நிறைந்த சென்னை கிறித்துவ கல்லூரி மற்றும் பள்ளிகள் போன்ற சிறந்த கல்வி நிறுவனங்கள் நிறைந்துள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார். மேலும், சென்னையில் அமையப்பெற்றுள்ள புகழ் பெற்ற வியாபார நிறுவனங்கள் பலவும் அவற்றின் கிளைளை தற்போது தாம்பரத்தில் நிறுவி உள்ளதாகவும், இதன் மூலமும் தாம்பரம் நகராட்சிக்கு வருவாய் உயர்ந்திட வழிவகை ஏற்பட்டுள்ளதாவும் தெரிவித்துள்ளார்.

**6.** மேலும், தாம்பரம் நகராட்சி எல்லையை சுற்றியுள்ள பகுதிகள் அனைத்தும் தாம்பரம் நகராட்சிக்கு சமமாக வளர்ந்து வருகின்றன எனவும், எனவே தாம்பரம் நகராட்சியைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் அடிப்படை வசதிகளான குடிநீர், பாதாளச் சாக்கடை போன்றவற்றை விரிவுபடுத்த வேண்டியது அவசியமாகிறது எனவும், மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் இணைந்துள்ளதால் அதற்கு ஈடாக தாம்பரம் நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்த வேண்டியது அவசியமாகிறது எனவும் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். தாம்பரம் மற்றும் பல்லவபுரம் நகராட்சிகள் தேர்வுநிலை நகராட்சியிலிருந்து சிறப்புநிலை நகராட்சிகளாக அரசாணை எண்.238, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 02.12.2008-ன்படி தரம் உயர்த்தப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

**7.** தாம்பரம் நகராட்சியுடன் இணைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் கீழ்காணும் விவரங்களையும் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்:-

Scanned by TapScanner

| வ. எண் | உள்ளாட்சியின் பெயர் | நிலை | பரப்பளவு ச.கி.மீ | 2011-ம் ஆண்டின் மக்கள் தொகை | தற்போதைய மக்கள் தொகை 2021 | கடைசி 3 ஆண்டு சராசரி வருமானம் (ரூ.கோடி) | 2020-ம் ஆண்டின் வருமானம் (ரூ.கோடி) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| | | | நகராட்சிகள் | | | | |
| 1 | தாம்பரம் | சிறப்பு நிலை | 20.72 | 174787 | 241332 | 109.42 | 90.57 |
| 2 | பல்லவபுரம் | சிறப்பு நிலை | 18.00 | 215452 | 296844 | 121.81 | 101.39 |
| 3 | பம்மல் | தேர்வு நிலை | 13.81 | 75870 | 89379 | 23.19 | 22.73 |
| 4 | செம்பாக்கம் | இரண்டாம் நிலை | 6.25 | 45356 | 66340 | 18.27 | 21.51 |
| 5 | அனகாபுத்தூர் | இரண்டாம் நிலை | 4.00 | 48050 | 54944 | 15.16 | 12.84 |
| | | | பேரூராட்சிகள் | | | | |
| 6 | சிட்லபாக்கம் | சிறப்பு நிலை | 2.90 | 37906 | 40000 | 12.90 | 11.37 |
| 7 | மாடம்பாக்கம் | சிறப்பு நிலை | 8.02 | 31681 | 50114 | 11.72 | 10.54 |
| 8 | பெருங்களத்தூர் | சிறப்பு நிலை | 7.35 | 37342 | 50934 | 22.61 | 21.26 |
| 9 | பீர்க்கங்கரணை | தேர்வு நிலை | 1.79 | 25871 | 35000 | 6.82 | 7.33 |
| 10 | திருநீர்மலை | சிறப்பு நிலை | 4.80 | 30702 | 36000 | 6.17 | 4.39 |
| | | மொத்தம் | 87.64 | 723017 | 960887 | 348.07 | 303.93 |

8. செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் தனது கடிதத்தில், தாம்பரம் நகராட்சி மற்றும் தாம்பரம் நகராட்சியுடன் இணைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள மேற்காணும் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் மன்ற ஒப்புதல் தீர்மானம் பெறப்பட்டுள்ளதாக தெரிவித்து, தீர்மானங்களின் நகலை இணைத்தனுப்பி வைத்துள்ளார்.

9. மேலும், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் தனது கடிதத்தில், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளால் வழங்கப்படும் அடிப்படை வசதிகள் மற்றும் சேவைகள் அனைத்தும் பேரூராட்சிகளுக்கும் சென்றடையும் பொருட்டு, இப்பகுதிகளை தாம்பரம் நகராட்சியொடு இணைத்து புதிய மாநகராட்சியாக தரம் உயர்த்துவதால் இப்பகுதிகளில் குடியிருக்கும் மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் என குறிப்பிட்டுள்ளார். மேலும், இவ்வாறு தரம் உயர்த்தப்படுவதால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து பகுதிகளிலும் குடியிருக்கும் பொது மக்களின் வாழ்க்கை தரம் உயர்வதுடன், அடிப்படை வசதிகள், கட்டமைப்பு மேம்பாடு, மேம்படுத்தப்பட்ட சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் பொது மக்களுக்கு கிடைக்கும் எனவும், இந்த மேம்பாட்டினால் பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் புதிய தொழிலகங்கள் ஏற்படவும், வேலைவாய்ப்புகள் உருவாகவும், வருவாய் பெருகவும் அனைத்து தரப்பு வளர்ச்சிக்கும் வழிவகுக்கும் எனவும் மாவட்ட ஆட்சியர் குறிப்பிட்டுள்ளார்.

10. எனவே, தாம்பரம் நகராட்சிக்கு அருகில் உள்ள பல்லவபுரம், பம்மல், அனகாபுத்தூர், செம்பாக்கம் ஆகிய 4 நகராட்சிகள் மற்றும் சிட்லபாக்கம், பெருங்களத்தூர், மாடம்பாக்கம், திருநீர்மலை, பீர்க்கங்கரணை ஆகிய 5 பேரூராட்சிகளை தாம்பரம் நகராட்சியுடன் இணைத்து புதிய மாநகராட்சியாக தரம் உயர்த்துவதற்கான செங்கல்பட்டு மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பினை பரிந்துரை செய்து அனுப்பி வைப்பதாக செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

Scanned by TapScanner

11. மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், செங்கல்பட்டு மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ஆகியோரின் செயற்குறிப்பின் அடிப்படையிலான நகராட்சி நிர்வாக இயக்குநரின் பார்வை (2)-ல் படிக்கப்பட்ட செயற்குறிப்பினை அரசு கவனமாக பரிசீலனை செய்து, தாம்பரம் மாநகராட்சியை அமைத்துருவாக்கும் பொருட்டு, கீழ்காணும் 5 நகராட்சிகள் மற்றும் 5 பேரூராட்சிகள் இணைக்கப்படலாம் என உத்தேச முடிவு மேற்கொண்டு அவ்வாறே ஆணையிடுகிறது:-

| வ.எண். | உள்ளாட்சியின் பெயர் |
|---|---|
| | **நகராட்சிகள்** |
| 1 | தாம்பரம் |
| 2 | பல்லவபுரம் |
| 3 | பம்மல் |
| 4 | செம்பாக்கம் |
| 5 | அனகாபுத்தூர் |
| | **பேரூராட்சிகள்** |
| 6 | சிட்லபாக்கம் |
| 7 | மாடம்பாக்கம் |
| 8 | பெருங்களத்தூர் |
| 9 | பீர்க்கங்கரணை |
| 10 | திருநீர்மலை |

12. இதனடிப்படையில், தாம்பரம் நகராட்சியுடன் 4 நகராட்சிகள் மற்றும் 5 பேரூராட்சிகள் ஆகியவற்றை இணைப்பது (INCLUSION) தொடர்பாக 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் பிரிவு 4ன் வகைமுறைகளின்படி தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அவ்வாறே, மேற்குறிப்பிடப்பட்டுள்ள 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின், (c) எனும் கூறின் கீழ், இவ்வாணையுடன் இணைக்கப்பட்டவாறான அறிவிக்கை (ஆங்கிலத்தில்) 11.09.2021 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் வெளியிடப்படும்.

13. மேலும், பத்தி 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள ஊராட்சிகளை இணைப்பதற்கான மேல் நடவடிக்கைகள் பின்னர் தனியே மேற்கொள்ளப்படும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சிவ் தாஸ் மீனா**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**பெறுநர்:-**
நகராட்சி நிர்வாக இயக்குர், சென்னை-28.
மாவட்ட ஆட்சித் தலைவர், செங்கல்பட்டு,
தொடர்புடைய நகராட்சி ஆணையர்கள்,
(நகராட்சி நிர்வாக இயக்குநர் வழியாக)
பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை-28.
தொடர்புடைய பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள்
(பேரூராட்சிகளின் ஆணையர் வழியாக)
**நகல்:-**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-09.
மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-09.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.6, ந.நி.5 மற்றும் அ.ந.2) துறை, சென்னை-09.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//** 11/9/21
**பிரிவு அலுவலர்**
11/9/21

Scanned by TapScanner

## APPENDIX.

## NOTIFICATION.

In exercise of the powers conferred by clause (c) of sub-section (1) of section 4 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the Governor of Tamil Nadu hereby declares his intention to include within the jurisdiction of Tambaram Municipality, the entire areas comprised in the following local authorities, so as to constitute the same as a City Municipal Corporation:-

| Sl.No. | Names of the local authorities |
|---|---|
| (1) | Pallavapuram Municipality |
| (2) | Pammal Municipality |
| (3) | Sembakkam Municipality |
| (4) | Anakaputhur Municipality |
| (5) | Chitlapakkam Town Panchayat |
| (6) | Madambakkam Town Panchayat |
| (7) | Perungaluthur Town Panchayat |
| (8) | Peerkankaranai Town Panchayat |
| (9) | Tiruneermalai Town Panchayat |

Based on the above inclusion, wards will be divided for the next ordinary election.

2. Any inhabitant of the said local areas or tax payer of the Municipalities, who desires to object the proposal, may submit his objection in writing to the Government of Tamil Nadu within six weeks from the date of publication of this Notification in the Tamil Nadu Government Gazette. Objections, if any, in writing should be addressed to the Additional Chief Secretary to Government, Municipal Administration and Water Supply Department, Secretariat, Fort St.George, Chennai-600 009.

SHIV DAS MEENA
ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT

//True Copy//

11/9/21

Section Officer

11/9/21

Scanned by TapScanner

சுருக்கம்

தென்காசி மாவட்டம் – சுரண்டை, திருநெல்வேலி மாவட்டம் – களக்காடு, கள்ளக்குறிச்சி மாவட்டம் – திருக்கோவிலூர், உளுந்தூர்பேட்டை, காஞ்சிபுரம் மாவட்டம் – குன்றத்தூர், மாங்காடு, விழுப்புரம் மாவட்டம் – கோட்டக்குப்பம், இராணிப்பேட்டை மாவட்டம் – சோளிங்கர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் – நந்திவரம்–கூடுவாஞ்சேரி ஆகிய ஒன்பது பேரூராட்சிகளை நகராட்சிகளாக அமைத்துருவாக்கலாம் என்ற உத்தேச முடிவை உறுதி செய்தல் மற்றும் மேற்படி ஒன்பது பேரூராட்சிகளை நகராட்சிகளாக அறிவித்தல் (Declared as Municipalities) – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை</u>

அரசாணை (நிலை) எண். 94

நாள்: 01.11.2021
திருவள்ளுவர் ஆண்டு 2052
பிலவ, ஐப்பசி–15
படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.67, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 11.09.2021.
2. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடித ந.க.எண்.20782/ 2021/மா.ந.அ1, நாள் 26.10.2021.

******

ஆணை :

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், தென்காசி மாவட்டம் – சுரண்டை, திருநெல்வேலி மாவட்டம் – களக்காடு, கள்ளக்குறிச்சி மாவட்டம் – திருக்கோவிலூர், உளுந்தூர்பேட்டை, காஞ்சிபுரம் மாவட்டம் – குன்றத்தூர், மாங்காடு, விழுப்புரம் மாவட்டம் – கோட்டக்குப்பம், இராணிப்பேட்டை மாவட்டம் – சோளிங்கர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் – நந்திவரம்–கூடுவாஞ்சேரி ஆகிய ஒன்பது பேரூராட்சிகளை நகராட்சிகளாக அமைத்துருவாக்கலாமென்ற அரசின் உத்தேச முடிவு குறித்து ஆணைகள் மற்றும் அறிவிக்கைகள் வெளியிடப்பட்டன. இவ்வறிவிக்கைகள் 11.9.2021–ம் நாளிட்ட தமிழ்நாடு அரசின் சிறப்பிதழ் எண்.409–ல் வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக இயக்குநரது கடிதத்தில், மேற்குறிப்பிடப்பட்ட ஒன்பது பேரூராட்சிகளை நகராட்சிகளாகத் தரம் உயர்த்துவதற்கான உத்தேச அரசாணை குறித்து இயக்குநரகத்தில் ஆட்சேபணையோ, கருத்துக்களோ ஏதும் பெறப்படவில்லை எனவும், மேலும், தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்தும் ஆட்சேபணையோ,

Scanned by TapScanner

கருத்துக்களோ ஏதும் பெறப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். எனவே, 1920-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் பிரிவு 4-ல் வகைமுறைகளின்படி மேற்குறிப்பிடப்பட்ட ஒன்பது பேரூராட்சிகளை நகராட்சியாக தரம் உயர்த்தி உறுதியாக்கம் செய்வதற்கான அரசாணை பிறப்பிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

3. இந்நிலையில், அரசு இச்செயற்குறிப்பின் மீதான கவனமான பரிசீலனைக்குப் பின்னர் நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரையை ஏற்று, தென்காசி மாவட்டம் – சுரண்டை, திருநெல்வேலி மாவட்டம் – களக்காடு, கள்ளக்குறிச்சி மாவட்டம் – திருக்கோவிலூர், உளுந்தூர்பேட்டை, காஞ்சிபுரம் மாவட்டம் – குன்றத்தூர், மாங்காடு, விழுப்புரம் மாவட்டம் – கோட்டக்குப்பம், இராணிப்பேட்டை மாவட்டம் – சோளிங்கர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் – நந்திவரம்-கூடுவாஞ்சேரி ஆகிய ஒன்பது பேரூராட்சிகளை நகராட்சிகளாக அமைத்துருவாக்கலாம் என்ற உத்தேச முடிவினை உறுதி செய்து இதன் மூலம் மேற்படி ஒன்பது பேரூராட்சிகளை நகராட்சிகளாக அறிவித்து (declared as Municipalities) அரசு ஆணையிடுகிறது.

4. இதன்படி, 1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் பிரிவு 4(3)-ன் கீழ் இவ்வாணையுடன் இணைக்கப்பட்டவாறான அறிவிக்கைகள் (ஆங்கிலத்தில்), 01.11.2021-ஆம் தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் வெளியிடப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சிவ் தாஸ் மீனா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்:-
பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை-01. (இவ்வரசாணையுடன் இணைக்கப்பட்ட அறிவிக்கைகளை தமிழ்நாடு அரசின் சிறப்பிதழில் வெளியிடவும் மற்றும் அதன் 50 பிரதிகளை அரசுக்கு அனுப்பி வைக்கவும்)
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28.
பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை-28.
தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
தொடர்புடைய நகராட்சி ஆணையர்கள். (நகராட்சி நிர்வாக இயக்குநர் வழியாக)
நகல்:-
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
சட்டத்துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
செயலாளர், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், அரும்பாக்கம், சென்னை-106.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.5, ந.ப.1 மற்றும் அ.ந.2) துறை, சென்னை-9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

Scanned by TapScanner

## APPENDIX.

## NOTIFICATION-I.

In exercise of the powers conferred by sub-section (3) of section 4 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the Governor of Tamil Nadu hereby declares the local authority of Surandai town panchayat to be the Surandai Municipality, the draft of the same having been previously published, as required under sub-section (1) of the said section 4.

Based on the above declaration, wards will be divided for the next ordinary election.

## NOTIFICATION – II.

In exercise of the powers conferred by sub-section (3) of section 4 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the Governor of Tamil Nadu hereby declares the local authority of Kalakkadu town panchayat to be the Kalakkadu Municipality, the draft of the same having been previously published, as required under sub-section (1) of the said section 4.

Based on the above declaration, wards will be divided for the next ordinary election.

## NOTIFICATION – III.

In exercise of the powers conferred by sub-section (3) of section 4 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the Governor of Tamil Nadu hereby declares the local authority of Thirukovilur town panchayat to be the Thirukovilur Municipality, the draft of the same having been previously published, as required under sub-section (1) of the said section 4.

Based on the above declaration, wards will be divided for the next ordinary election.

## NOTIFICATION – IV.

In exercise of the powers conferred by sub-section (3) of section 4 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the Governor of Tamil Nadu hereby declares the local authority of Ulundurpet town panchayat to be the Ulundurpet Municipality, the draft of the same having been previously published, as required under sub-section (1) of the said section 4.

Based on the above declaration, wards will be divided for the next ordinary election.

Scanned by TapScanner

## NOTIFICATION – V.

In exercise of the powers conferred by sub-section (3) of section 4 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the Governor of Tamil Nadu hereby declares the local authority of Kundrathur town panchayat to be the Kundrathur Municipality, the draft of the same having been previously published, as required under sub-section (1) of the said section 4.

Based on the above declaration, wards will be divided for the next ordinary election.

## NOTIFICATION – VI.

In exercise of the powers conferred by sub-section (3) of section 4 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the Governor of Tamil Nadu hereby declares the local authority of Mangadu town panchayat to be the Mangadu Municipality, the draft of the same having been previously published, as required under sub-section (1) of the said section 4.

Based on the above declaration, wards will be divided for the next ordinary election.

## NOTIFICATION – VII.

In exercise of the powers conferred by sub-section (3) of section 4 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the Governor of Tamil Nadu hereby declares the local authority of Kottakuppam town panchayat to be the Kottakuppam Municipality, the draft of the same having been previously published, as required under sub-section (1) of the said section 4.

Based on the above declaration, wards will be divided for the next ordinary election.

## NOTIFICATION – VIII.

In exercise of the powers conferred by sub-section (3) of section 4 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the Governor of Tamil Nadu hereby declares the local authority of Sholingur town panchayat to be the Sholingur Municipality, the draft of the same having been previously published, as required under sub-section (1) of the said section 4.

Based on the above declaration, wards will be divided for the next ordinary election.

Scanned by TapScanner

## NOTIFICATION –IX.

In exercise of the powers conferred by sub-section (3) of section 4 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the Governor of Tamil Nadu hereby declares the local authority of Nandhivaram-Guduvancheri town panchayat to be the Nandhivaram-Guduvancheri Municipality, the draft of the same having been previously published, as required under sub-section (1) of the said section 4.

Based on the above declaration, wards will be divided for the next ordinary election.

**SHIV DAS MEENA**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

**//True Copy//**

**Section Officer.**

Scanned by TapScanner